ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

மணவாளமாமுனிகளால் நியமிக்கப்பெற்றது

# இயல் சாற்று

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே வரவரமுநயே நம:

# இயல் சாற்று

## ஸ்ரீ பிள்ளையுறங்காவில்லிதாஸர் அருளிச்செய்தது

நன்றுந் திருவுடையோம் நானிலத்தில் எவ்வுயிர்க்கும் ⋆
ஒன்றும் குறையில்லை ஓதினோம் ⋆ - குன்றம்
எடுத்தானடி சேர் இராமானுசன் தாள் ⋆
பிடித்தார் பிடித்தாரைப் பற்றி

## ஸ்ரீ வகுளாபரண பட்டர் அருளிச்செய்தது

வாழி திருக்குருகூர் வாழி திருமழிசை ⋆
வாழி திருமல்லி வளநாடு ⋆ - வாழி
சுழி பொறித்த நீர்ப் பொன்னித் தென் அரங்கன் தன்னை ⋆
வழிபறித்த வாளன் வலி

## ஸ்ரீ பராங்குசதாஸர் அருளிச்செய்தது

திருநாடு வாழி திருப்பொருநல் வாழி ⋆
திருநாட்டுத் தென்குருகூர் வாழி ⋆ - திருநாட்டுச்
சிட்டத்தமர் வாழி ⋆ - வாழி சடகோபன்
இட்டத் தமிழ்ப்பாவிசை

## ஸ்ரீ பரகாலதாஸர் அருளிச்செய்தது

மங்கைநகர் வாழி வண் குறையலூர் வாழி ⋆
செங்கை அருள்மாரி சீர் வாழி ⋆ - பொங்கு புனல்

மண்ணித் துறை வாழி ⋆ - வாழி பரகாலன்
எண்ணில் தமிழ்ப்பாவிசை

## ஸ்ரீ பிள்ளை இராமானுசதாஸர் அருளிச்செய்தது

வாழியரோ தென் குருகை வாழியரோ தென் புதுவை ⋆
வாழியரோ தென் குறையல் மாநகரம் ⋆ - வாழியரோ
தக்கோர் பரவும் தடம் சூழ் பெரும்பூதூர் ⋆
முக்கோல் பிடித்த முனி

## ஸ்ரீ திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்தது

மொழியைக் கடக்கும் பெரும் புகழான் ⋆ வஞ்ச முக்குறும்பாம்
குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடிய பின் ⋆
பழியைக் கடத்தும் இராமானுசன் புகழ் பாடியல்லா
வழியைக் கடத்தல் ⋆ எனக்கினி யாதும் வருத்தம் அன்றே

## ஸ்ரீ பிள்ளை அழகியமணவாளதாஸர் அருளிச்செய்தது

நெஞ்சத்திருந்து நிரந்தரமாக நிரயத்துய்க்கும் ⋆
வஞ்சக் குறும்பின் வகை அறுத்தேன் ⋆ மாயவாதியர் தாம்
அஞ்சப் பிறந்தவன் சீமாதவன் அடிக்கன்பு செய்யும் ⋆
தஞ்சத்தொருவன் சரணாம்புய மென் தலைக் கணிந்தே

## ஸ்ரீ பின்பழகராம் பெருமாள் ஜீயர் அருளிச்செய்தது

ஊழிதொறும் ஊழிதொறும் உலகம் உய்ய
உம்பர்களும் கேட்டுய்ய ⋆ அன்பினாலே
வாழியெனும் பூதம் பேய் பொய்கை மாறன்
மழிசையர் கோன் பட்டர்பிரான் மங்கை வேந்தன் ⋆

கோழியர் கோன் தொண்டர்துகள் பாணன் கோதை
குலமுனிவன் கூறிய நூலோதி ⋆ வீதி
வாழி என வரும் திரளை வாழ்த்துவார் தம்
மலரடி என் சென்னிக்கு மலர்ந்த பூவே

இயல் சாற்று முற்றிற்று

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

sunder kidāmbi prapatti dot com sunder kidāmbi